பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 11 2025** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 3-ல் இரண்டு பங்கிற்கும் அதிகமான இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

2. முன்னாள் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தியுள்ளார்.

3. நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு எரிசக்தி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறைகளின் பங்களிப்பு முக்கியமானது என்று மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

4. ரஷ்யா உடனான வர்த்தக உறவுகள் மேலும் வலுவடையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் -----

<<<<<<<<<>>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 3-ல் இரண்டு பங்கிற்கும் அதிகமான இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

243 உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு கடந்த ஆறு மற்றும் 11-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

தேசிய ஜனநாயக கூட்டணி 183-க்கும் அதிகமான இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி 85 இடங்களிலும்,

ஐக்கிய ஜனதாதளம் 76 இடங்களிலும்,

லோக் ஜனசக்தி 22 இடங்களிலும், முன்னிலையில் உள்ளன.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் ராஷ்ட்ரிய ஜனதாதளம் 36 இடங்களிலும், காங்கிரஸ் ஐந்து இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

சுயேட்சைகள் மற்றும் இதர கட்சிகள் 19 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளன.

<<<<<<<<<>>>>>>>

இதனிடையே, ஆறு மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளில் காலியாக உள்ள எட்டு

தொகுதிகளுக்கு நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்பட்டு வருகின்றன.

இதில், ஒடிஷாவின் **Nuapada** தொகுதியிலும், ஜம்மு காஷ்மீரின் **Nagrota** தொகுதியிலும் பிஜேபி முன்னிலை பெற்றுள்ளது.

மிசோரம் மாநிலத்தில் ஒரு தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் மிசோ தேசிய முன்னணி வேட்பாளர் வெற்றிபெற்றுள்ளார்.

ராஜஸ்தானில் **Anta** மற்றும் தெலங்கானாவின் **Jubilee Hills** தொகுதிகளில் காங்கிரஸ் முன்னிலையில் உள்ளது.

ஜார்கண்டில், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும், பஞ்சாபில் ஆம் ஆத்மியும் முன்னிலை பெற்றுள்ளன.

ஜம்மு காஷ்மீரின் **Budgam** தொகுதியில் மக்கள் ஜனநாயக கட்சி முன்னிலை வகிக்கிறது.

<<<<<<<<<>>>>>>>

முன்னாள் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினத்தை ஒட்டி, அவருக்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள நேருவின் நினைவிடத்தில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நேருவின் பிறந்த நாள் குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், குழந்தைகளின் நலனுக்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குழந்தைகள் முறையான கல்வி பெற்று, அதன்மூலம் புதிய சிந்தனை மற்றும் புதிய ஆற்றலுடன் தேசத்தை முன்னேற்றும் வலிமையை பெற குழந்தைகள் தினத்தில் வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு எரிசக்தி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறைகளின் பங்களிப்பு முக்கியமானது என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.

கொரிய கப்பல் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் இன்று நடத்திய ஆலோசனை குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த கூட்டம் ஆக்கப்பூர்வமானதாக அமைந்தது என்று கூறியுள்ளார்.

நாட்டில் **150** பில்லியன் டாலர் அளவிற்கு கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்யப்படுவது, நமது எரிசக்தி மற்றும் கப்பல் தேவைகளை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மொத்த வர்த்தகத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயுத்துறை **28** சதவீத பங்களிப்பை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**2034-**ஆம் ஆண்டு வாக்கில், நாட்டின் எண்ணெய் துரப்பன பணிகளுக்கு **100** கப்பல்கள் தேவைப்படும் நிலையில், கொரியாவின் நவீன கப்பல் கட்டும் தொழில்நுட்பங்களை இந்திய கப்பல் கட்டும்

நிறுவனங்களில் பயன்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>

உலக நீரிழிவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், லட்சக்கணக்கான மக்களை பாதிக்கும் நீரிழிவு நோய் பற்றி விரிவாக அறிந்துகொள்ள இந்நாள் உதவுவதாக கூறியுள்ளார்.

இந்த பாதிப்பு குறித்து இன்னும் அதிக விழிப்புணர்வு தேவை என்பதையும், முன்கூட்டியே கண்டறிந்து, உரிய சிகிச்சை பெற வேண்டியதன் அவசியத்தையும் இந்நாள் உணர்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு பாதிப்பு கட்டுப்படுத்தக்கூடியது என்றும், இதனை தடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முறையான உணவை உட்கொள்வதுடன், போதிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வதோடு, அவ்வப்போது பரிசோதனை செய்துகொள்வதன் மூலம் உடலில் சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றும் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், நியூயார்க்கில் இன்று ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்டரஸை சந்தித்து பேசினார்.

இதுகுறித்து திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலக நாடுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் ஐ நா பொதுச்செயலாளரின் பணிகளுக்கு பாராட்டு தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு அவர் அளித்துவரும் ஆதரவுக்கும், நன்றி தெரிவித்துக் கொண்டதாக கூறியுள்ளார்.

மேலும், திரு குட்ரசின் இந்திய வருகையை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<<>>>>>>

ரஷ்யா உடனான வர்த்தக உறவுகள் மேலும் வலுவடையும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய வர்த்தகத்துறை செயலாளர் திரு ராஜேஷ் அகர்வால், மாஸ்கோவில் அந்நாட்டு பொருளாதார மேம்பாட்டுத்துறை துணை அமைச்சர் விளாடிமீர் **Ilyichev** -ஐ சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதுதொடர்பாக, வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த **2014**-ஆம் ஆண்டு **25** பில்லியன் டாலராக இருந்த இருதரப்பு வர்த்தகத்தை **2030**-ஆம் ஆண்டுக்குள் **100** பில்லியன் டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா உடனான வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும், சந்தை வாய்ப்புகளை அதிக அளவில் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>

மும்பை விமான நிலையத்தில் சுமார் **10** கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்கள் மற்றும் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பாங்காக்கில் இருந்து வந்த பயணிகளிடம் சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய இந்த சோதனையின்போது, சுமார் 13 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு கரன்சிகளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, இரண்டு பேர் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுங்கத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<<<>>>>>>

பகவத் கீதையின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வகையில், லெபனான் தலைநகர் பெய்ரூட்டில், சர்வதேச கீதா மஹோட்சவம் நடைபெற்றது.

அங்குள்ள இந்திய தூதரகம் சார்பில், நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் பேசிய லெபனானுக்கான இந்திய தூதர் திரு நூர் ரஹ்மான் ஷேக், பகவத் கீதை மனித நாகரீகத்தின் நற்பண்புகளை எடுத்துக்காட்டுவதாக கூறினார்.

லெபனானில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் இதில் பங்கேற்று பகவத் கீதையின் பல்வேறு அம்சங்களை எடுத்துரைத்தனர்.

<<<<<<<<>>>>>>

இந்தியா — பிரான்ஸ் விமானப்படைகளின் கூட்டு பயிற்சியில் பங்கேற்பதற்காக இந்திய விமானப்படையினர் பிரான்ஸ் நாட்டின்

**Mont — de — Marsan** விமானப்படைத் தளத்திற்கு சென்றடைந்தனர்.

கருடா **2025** என்ற பெயரிலான இந்த பயிற்சி நாளை மறுநாள் தொடங்கி, வரும் **27**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இருநாட்டு விமானப்படைகளின் போர் திறன் மற்றும் ஆயத்த நிலையை வெளிப்படுத்தும் இந்த பயிற்சியில், சுகோய் மற்றும் ரஃபேல் ரக விமானங்கள் பங்கேற்பதாக இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

<<<<<<<<>>>>>>

ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

டாக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் குழு பிரிவில், தென்கொரியாவை வீழ்த்தி இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------

ஜப்பான் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் நிக்கி கலியாண்டா - தாய்லாந்தின் **Pruchya Isaro** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **7-5, 6-3** என்ற செட் கணக்கில், தைவானின் **Yu Hsiou Hsu — Tsung Hao Huang** இணையை வென்றது.

----------------

ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **21-13, 21-17** என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் **Kean Yew Loh**-வை வென்றார்.

-------------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் — அமெரிக்காவின் **Reese Stalder** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

------------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்க அணி, முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்புக்கு 119 ரன் எடுத்துள்ளது.

கொல்கத்தாவில் இன்று தொடங்கிய இப்போட்டியில், டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

<<<<<<<<<END>>>>>>>